Kurusady
CATECHISM

## புனித அந்தோணியார் ஆலயம், குருசடி

**மறைக்கல்வி - வினாடிவினா 018 - பிப்ரவரி 6, 2022 முதல் பிப்ரவரி 12, 2022 வரை.**

# பதினெட்டாவது வாரத்திற்கான வினாடிவினா

**சரியான பதிலை டிக் [ ✔ ] செய்யவும்** **மதிப்பெண்கள்: 100**

**கேள்வி 01**

திருமுழுக்கினால் மக்கள் கிறிஸ்துவின் எந்த நிகழ்ச்சியில் இணைக்கப் பெறுகின்றனர்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 12)

[ ] திருவழிப்பாட்டு நிகழ்வு

[ ] உயிர்ப்பு நிகழ்வு

[ ] பாஸ்கா மறைநிகழ்ச்சி

[ ] பிறப்பு நிகழ்வு

**கேள்வி 02**

சிலுவையில் துயில் கொண்ட கிறிஸ்துவின் விலாவிலிருந்து தோன்றியது எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 12)

[ ] திருமுழுக்கு

[ ] முழுத்திருச்சபை

[ ] உறுதி பூசுதல்

[ ] பாஸ்கா நிகழ்வு

**கேள்வி 03**

பெந்தேகோஸ்தே நாளில் திருச்சபை உலகில் தோன்றிய போது யாருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு திருமுழுக்கு பெற்றார்கள்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 13)

[ ] தூய பவுல்

[ ] தூய யோவான்

[ ] தூய ஸ்தேவான்

[ ] தூய பேதுரு

**கேள்வி 04**

சிலுவையில் அன்று தன்னையே பலியாக ஒப்புக் கொடுத்த இயேசு இன்று யாருடைய பணி வாயிலாக ஒப்புக் கொடுக்கிறார்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 13)

[ ] திருப்பணியாளர்களின் பணி

[ ] பொதுநிலையினரின் பணி

[ ] நற்செய்தியாளர்களின் பணி

[ ] ஆயர்களின் பணி

**கேள்வி 05**

நம்பிக்கை கொண்டோர் பாஸ்கா அடையாளங்களால் நிறைவு பெற்று “அன்பு பற்றால் ஓர் உள்ளம்” படைத்தவர்களாக இருக்க எது தூண்டுகிறது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 16)

[ ] திருப்பலி

[ ] அருளடையாளங்கள்

[ ] திருவழிபாடு

[ ] உயிர்ப்பு நிகழ்வு

**கேள்வி 06**

திருவழிபாட்டை ஒழுங்கு படுத்தும் உரிமை யாருக்கு உரியது?

(இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 21)

[ ] திருச்சபை ஆட்சியாளருக்கு

[ ] மக்களுக்கு

[ ] பொது நிலையினருக்கு

[ ] வழிபாட்டு குழுவினருக்கு

**கேள்வி 07**

திருவழிபாட்டை சீரமைக்க எத்தனை பொது விதிகள் உள்ளன?

(இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 21)

[ ] இரண்டு பொதுவிதிகள்

[ ] மூன்று பொதுவிதிகள்

[ ] நான்கு பொதுவிதிகள்

[ ] ஐந்து பொதுவிதிகள்

**கேள்வி 08**

திருவழிபாட்டு கொண்டாட்டத்தில் மிகச் சிறப்பான இடத்தைப் பெறுவது எது?

(இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 22)

[ ] மறையுரை

[ ] திருவிவிலியம்

[ ] நற்கருணை

[ ] பாடல்கள்

**கேள்வி 09**

திருப்பலி எப்பொழுதும் எத்தகைய தன்மை வாய்ந்தது?

(இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 23)

[ ] பொதுத்தன்மையும், சமூகப்பண்பும்

[ ] இறைத்தன்மை

[ ] பொதுத்தன்மை

[ ] சமூகத்தன்மை

**கேள்வி 10**

திருவழிபாட்டில் எது இருக்கக் கூடாது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 24)

[ ] கருத்து வேறுபாடுகள்

[ ] வகுப்பு பாகுபாடுகள்

[ ] சடங்கு முறைகள்

[ ] தேவையற்ற செயல்கள்

**கேள்வி 11**

திருப்பலியில் நாம் எதை நினைவு கூர்கிறோம்?
(இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 30)

[ ] கிறிஸ்துவின் இறப்பு, உயிர்ப்பு

[ ] கிறிஸ்துவின் பிறப்பு

[ ] கிறிஸ்துவின் இறப்பு

[ ] கிறிஸ்துவின் உயிர்ப்பு

**கேள்வி 12**

பொது மன்றாட்டின் மற்றொரு பெயர் என்ன? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 32)

[ ] நம்பிக்கை கொண்டோரின் மன்றாட்டு

[ ] மக்களின் மன்றாட்டு

[ ] புனிதர்களின் மன்றாட்டு

[ ] பொது நிலையினரின் மன்றாட்டு

**கேள்வி 13**

மறைமாவட்டத்தில் கூட்டுப்பலி பற்றிய ஒழுங்குகளை கண்காணிப்பது யாருடைய கடமை?
(இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 34)

[ ] அருட்பணியாளரின் கடமை

[ ] ஆயரின் கடமை

[ ] வேதியரின் கடமை

[ ] திருத்தொண்டர்களின் கடமை

**கேள்வி 14**

தனித்தனி திருப்பலி நிறைவேற்றப்படாத நாள் எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 34)

[ ] பெரிய வியாழன்

[ ] புனித வெள்ளி

[ ] புனித சனி

[ ] மூன்று நாட்களும்

**கேள்வி 15**

அருளடையாளங்கள் அருள் வேண்டல் குறிகள் அனைத்தும் எதிலிருந்து ஆற்றலைப் பெறுகின்றன? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 36)

[ ] இயேசுவின் பிறப்பிலிருந்து

[ ] பாஸ்கா மறைநிகழ்விலிருந்து

[ ] இயேசுவின் இறப்பிலிருந்து

[ ] இயேசுவின் உயிர்ப்பிலிருந்து

**கேள்வி 16**

அருளடையாளங்களையும், அருள் வேண்டல் குறிகளையும் வழங்க எந்த மொழியை கையாள வேண்டும்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 36)

[ ] லத்தின் மொழியை

[ ] அந்தந்த இடத்து மொழியை

[ ] கிரேக்க மொழியை

[ ] ஆங்கில மொழியை

**கேள்வி 17**

உறுதிபூசுதல் என்னும் அருளடையாளத்தை பெறும் முன் எந்த வாக்குறுதியை புதுப்பிக்க வேண்டும்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 38)

[ ] ஒப்புரவு

[ ] நற்கருணை

[ ] திருமுழுக்கு

[ ] திருப்பலி

**கேள்வி 18**

திருமணத்தை நிகழ்த்தும் திருப்பணியாளர் யாருடைய விருப்பத்தைக் கேட்டு திருமணம் நிறைவேற்றி வைக்க வேண்டும்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 40)

[ ] மணமகனின் பெற்றோர் விருப்பம்

[ ] மணமகளின் பெற்றோர் விருப்பம்

[ ] மணமக்களின் விருப்பம்

[ ] இவை அனைத்தம்

**கேள்வி 19**

நோயில் பூசுதல் சடங்கு எந்த அருளடையாளத்திற்குப் பின் வழங்க வேண்டும்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 39)

[ ] திருமுழுக்கு

[ ] ஒப்புரவு

[ ] நற்கருணை

[ ] இவை அனைத்தும்

**கேள்வி 20**

திருப்புகழ் மாலையின் குறிக்கோள் எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 42)

[ ] நாள் முழுவதையும் தூய்மைப்படுத்துவது

[ ] உள்ளத்தை தூய்மைப்படுத்துவது

[ ] மக்களை தூய்மைப்படுத்துவது

[ ] ஆன்மாவை தூய்மைப்படுத்துவது

**கேள்வி 21**

ஆண்டவரின் நாள் எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 49)

[ ] புனித வியாழன்

[ ] ஞாயிறு

[ ] புனித வெள்ளி

[ ] கடன் திருநாட்கள்

**கேள்வி 22**

ஞாயிற்றுக்கிழமை திருச்சபை எதை நினைவில் கொணர்கின்றது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 48)

[ ] ஆண்டவரின் உயிர்த்தெழுதல்

[ ] ஆண்டவரின் பாஸ்கா

[ ] ஆண்டவரின் நாள்

[ ] மக்களின் பங்கேற்ப்பு

**கேள்வி 23**

"நிறை வாழ்வின் சிறப்புமிகு கனி" என்று திருச்சபை யாரை வியந்து போற்றுகின்றது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 48)

[ ] இயேசு கிறிஸ்து

[ ] திருத்தந்தை

[ ] அன்னை மரியாள்

[ ] புனித பேதுரு

**கேள்வி 24**

திருவழிபாட்டு ஆண்டு முழுவதன் அடிப்படையாகவும,; மையக்கருவாகவும் துலங்கும் நாள் எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 49)

[ ] குருத்து ஞாயிறு

[ ] ஆண்டவரின் நாள் (ஞாயிறு)

[ ] புனித வியாழன்

[ ] புனித வெள்ளி

**கேள்வி 25**

நம்பிக்கை கொண்டோரின் வாழ்வில் முதலிடம் வகிக்க வேண்டியவை எவை? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 50)

[ ] ஆண்டவரின் திருவிழாக்கள்

[ ] புனிதர்களின் திருவிழாக்கள்

[ ] திருப்பலி

[ ] அருளடையாளங்கள்

இந்த கேள்வித்தாள் உங்கள் பயிற்சிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

உங்கள் பதிலை ஆன்லைனில் சமர்ப்பிக்க, இந்த இணையதள முகவரியில் பதிவு செய்யவும்
https://www.kurusady.com/catechism/

ஆன்லைனில் சமர்ப்பிக்க முடியாதவர்கள், இந்த வினாத்தாளை அச்சிட்டு உங்கள் பதிலை டிக் [✔] செய்து பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இப்படிக்கு,
அருட்பணி. பெர்பெச்சுவல் ஆன்றனி,
பங்கு தந்தை,
புனித அந்தோணியார் ஆலயம், குருசடி.